பதிப்புரிமை ஆசிரியருக்கே /All Rights to Author புதிய பாடத்திட்டம் / New Syllabus

NEW GEOGRAPHY EXAMINATION

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) மாதிரி வினாத்தாள், 2020 ஓகஸ்ற்

**General Cerificate of Education (Adv. Level) Model Paper, August 2020**

புவியியல் II
Geography II

22 T II

*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப் பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், விடையெழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

ஆசிரியர்: திரு.ஏ.கஜன் B.A Tamil (R)
077 2400 707 / 076 8044 959

MODEL PAPER 1
மாதிரி வினாத்தாள்


**அறிவுறுத்தல்கள்:**

சுட்டெண்:.................................................

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக.

## பகுதி I - பௌதிகப் புவியியல்

**1.** (i) கீழே படத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள தகட்டோட்டுத் தகடுகளைச் **சரியாக** இனங்கண்டு பெயரிடுக. (**03** புள்ளிகள்)





(ii) **'தகட்டசைவு'** என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது? (**02** புள்ளிகள்)


(iii) தகட்டசைவுகளின் நிலைமாற்றத்தின் விளைவாகவே புவிநடுக்கங்கள் **மற்றும்** எரிமலைகள் தோற்றம் பெறுகின்றன" – மேற்படி கூற்றைப் பொருத்தமான உதாரணங்கள் **மற்றும்** வரைபட உதவியுடன் ஆராய்க. (**09** புள்ளிகள்)

(iv) புவிநடுக்கத்தினால் ஏற்படும் பௌதிக மற்றும் மானிட ரீதியான பாதிப்புகள் நான்கினைப் பொருத்தமான உதாரணங்கள் தந்து பரிசீலிக்குக. (**06** புள்ளிகள்)

**2.** (i) **'உயிரினக் கூட்டங்கள்'** என்பதை வரையறை செய்க. (**02** புள்ளிகள்)

(ii) கீழே **A** மற்றும் **B** ஆகிய ஆங்கில எழுத்துக்களால் குறித்துக் காட்டப்படும் உலகின் பிரதான **இரு** கண்டங்களிலும் பரம்பிக் காணப்படும், உயிரினக் கூட்டமொன்று நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது.



மேலே **A**, **B** என அடையாளப்படத்தப்பட்டுள்ள உயிரினக் கூட்டத்தை பின்வரும் தலைப்புக்களின் கீழ் விவரிக்குக.
(அ) காலநிலைக் காரணிகள் (ஆ) இயற்கைத் தாவரம் **(04** புள்ளிகள்)

(iii) மேலே வினா (ii) இல் உம்மால் அடையாளங் காணப்பட்ட உயிரினக் கூட்டத்தின் அழிவிற்குப் பொறுப்பான **நான்கு** காரணிகளைச் உதாரணம் தந்து விளக்குக. **(08** புள்ளிகள்)

(iv) உலக உயிரினக் கூட்டங்களில் ஏற்பட்டுவரும் தாக்கங்களைக் குறைக்க முன்வைக்கக்கூடிய எவையேனும் **மூன்று** நடவடிக்கைகளைப் பரிசீலிக்குக. **(06** புள்ளிகள்)

**3.** (i) பௌதிக அமைப்பின் அடிப்படையில் பாறைகளை வகைப்படுத்துக. **(03** புள்ளிகள்)

(ii) மேலே வினா (i) இல் உம்மால் அடையாளம் செய்யப்பட்ட பாறை வகைகளில் **ஏதாவது** ஒன்றினைத் தெரிந்தெடுத்து விளக்கப்பட உதவியுடன் ஆராய்க. **(05** புள்ளிகள்)


(iii) மண் உருவாக்கக் காரணிகள் **எவையேனும்** நான்கினைச் சுருக்கமாக விளக்குக. **(06** புள்ளிகள்)

(iv) புறம்பிறந்தவிசைச் செயற்பாடுகளுடன் தொடர்புபடும் உரிவுக் கருவிகள் காரணமாகப், பாறைகள் **மற்றும்** மண் என்பவற்றின் அமைப்பு மற்றும் கட்டமைப்பு ஏற்படவல்ல பௌதிக ரீதியான மாற்றங்களை வரைபட உதவியுடன் விளக்குக. **(06** புள்ளிகள்)

**4.** (i) வளிமண்டலத்தின் முதனிலைச் சுற்றோட்டத்தில் உள்ளடங்கும் காற்றுப் பாங்குகளை அடையாளம் செய்க. **(03** புள்ளிகள்)

(ii) மேலே வினா (i) இல் நீர் அடையாளம் செய்த காற்றுப் பாங்குகளில் யாதேனும் ஒன்றைத் தெரிந்தெடுத்து அதன் இயல்புகளை விவரிக்குக. **(04** புள்ளிகள்)


(iii) கீழே தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில் பிரதான சில அயனமண்டலச் சூறாவளிகளின் உருவாக்கப் பிரதேசங்கள் **A – C** வரையான ஆங்கில எழுத்துக்களால் அடையாளம் செய்யப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாக இனங்கண்டு எழுதுக. **(03** புள்ளிகள்)






(iv) சூறாவளித் தாக்கத்தினால் ஏற்படவல்ல பௌதிக **மற்றும்** மானிட ரீதியான **ஐந்து** தாக்கங்களைச் சுருக்கமாக விவரிக்குக. **(10** புள்ளிகள்)

## பகுதி II – மானிடப் புவியியல்

**5.** (i) கீழே **A, B மற்றும் C** ஆகிய ஆங்கில எழுத்துக்களால் அடையாளம் செய்யப்பட்டுள்ள குடியிருப்புப் பாங்குகளைச் **சரியாக** இனங்கண்டு எழுதுக. **(03** புள்ளிகள்)


**A**


**B**


**C**

(ii) **A மற்றும் B** ஆகிய குடியிருப்புகளின் முனைப்பான பண்புகள் தலா மூன்றினை அடையாளம் செய்க. **(03** புள்ளிகள்)

(iii) இலங்கையின் குடியிருப்புகளின் நவீன போக்குத் தொடர்பில் சுருக்கமாக ஆராய்க. **(06** புள்ளிகள்)

(iv) இலங்கையின் நகராக்க வேகம் மிகவும் மந்தகதியில் அமைவதில் செல்வாக்குச் செலுத்தும் **மூன்று** காரணிகளைச் சுருக்கமாகப் பரிசீலிக்குக. **(08** புள்ளிகள்)

**6.** (i) இலங்கை சுற்றுலா சபையினால் அடையாளம் செய்யப்பட்டுள்ள பிரதான சுற்றுலா வலயங்கள் எவையேனும் **நான்கினைப்** பெயரிடுக. **(02** புள்ளிகள்)


(ii) இலங்கைக்கு அதிகளவிலான உல்லாசப் பிரயாணிகள் வருகை தருவதற்கான **மூன்று** காரணிகளைச் சுருக்கமாக விவரிக்குக. **(06** புள்ளிகள்)

(iii) உல்லாசப் பிரயாணக் கைத்தொழிலின் காரணமாக இலங்கை எதிர்நோக்கியுள்ள பாதிப்புக்களைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் சுருக்கமாக ஆராய்க.
(அ) பௌதிகப் பாதிப்புகள் (ஆ) சமூகப் பாதிப்புகள் **(06** புள்ளிகள்)

(iv) இலங்கையின் பொருளாதாரத்திற்கு கைத்தொழில்களின் பங்களிப்பினை எவையேனும் **மூன்று** விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விளக்குக. **(06** புள்ளிகள்)

A.Kajan

**7.** உலகில் சனத்தொகை கூடிய முதல் **பத்து** நாடுகள் தொடர்பிலான தரவுகள் கீழுள்ள வரைபு மூலம் இனங்காட்டப்பட்டுள்ளன. அதனை அடிப்படையாகக் கொண்டு அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.



Source: www.internetworldstats.com/stats8.htm

(i) மேற்படி வரைபினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது உலகின் சனத்தொகைப் பரம்பல் பாங்கில் அவதானிக்கத்தக்க முனைப்பான பண்புகள் **மூன்று** தருக. **(03** புள்ளிகள்)

(ii) மேலே வினா (i) இற்கு உம்மால் வழங்கப்பட்ட விடைகளையும், உமது பின்னணி அறிவையும் அடிப்படையாகக் கொண்டு, உலகின் சமனற்ற சனத்தொகைப் பரம்பலைத் தீர்மானிக்கும் **ஆறு** பிரதான காரணிகளை அடையாளம் செய்க. **(03** புள்ளிகள்)

(iii) **ஒன்றில்** இந்தியா **அல்லது** சீனா சனத்தொகை அதிகரிப்பினால் எதிர்நோக்கத்தக்க **மூன்று** சவால்களைச் சுருக்கமாக விளக்குக. **(06** புள்ளிகள்)

(iv) சனத்தொகை குறைந்த நாடுகள் எதிர்நோக்கும் **இரண்டு** பிரச்சினைகளையும், அதற்குத் தீர்வாக அவை மேற்கொள்ள முடியுமென நீர் கருதும் **இரண்டு** ஆலோசனைகளையும் சுருக்கமாக விளக்குக. **(08** புள்ளிகள்)

**8.** (i) **‘பிராந்திய அமைப்புகள்’** எனும் பதத்தைத் தெளிவுறுத்துக. (**02** புள்ளிகள்)

(ii) “வளர்முக நாடுகளின் பிராந்திய நிறுவனங்கள் உலகமயமாக்கலின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதை முதன்மை நோக்காகக் கொண்டுள்ளன” ஆசியாவில் **இரண்டு** முக்கியமான பிராந்திய நிறுவனங்களிலிருந்து குறிப்பான உதாரணங்கள் தந்து இக் கூற்றினைப் பரிசீலிக்குக. (**08** புள்ளிகள்)

(iii) உலகின் **நான்கு** பிரதான பல்தேசிய நிறுவனங்களைப் பெயரிடுக. (**02** புள்ளிகள்)

(iv) உலகப் பொருளாதாரத்தில் பல்தேசிய நிறுவனங்களின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டும் **நான்கு** காரணிகளைச் சுருக்கமாக விவரிக்குக. (**08** புள்ளிகள்)

* * *

A.Kajan - - A.Kajan